ந.க.246/2013/CE-5(5) நாள்:13.03.2013

ஐயா,

பொருள் : தேர்தல் – கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல் – தேர்தல் நடத்துதல் தொடர்பான சில சந்தேகங்கள் – தேர்தலுக்கான இடங்கள் – அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

*****

அனைத்து பார்வையாளர்களுக்கான (Observers) 10.03.2013 தேதி நடைபெற்ற கூட்டத்தில் எழுப்பப்பட்ட சந்தேகங்களுள் ஒன்று தேர்தல் நடைபெறும் இடத்தைப் பற்றியதாகும்.

தேர்தல் தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளில் வாக்குச்சாவடி அதாவது ஓட்டுப்பதிவு நடக்கும் இடத்தை தேர்வு செய்வது மிக முக்கியமானதொன்றாகும்.

தேர்தலுக்கான இடங்கள் பற்றி தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான கையேட்டில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. (3.9-தேர்தலுக்கான இடங்கள்- பக்கங்கள் 30, 31 மற்றும் 32- பத்திகள் 3.9.1. முதல் 3.9.6 வரை).

ஏற்கெனவே தேர்தல் அறிவிப்பில் இடங்கள் பற்றிய விபரங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் பார்வையாளர்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் கீழ்வரும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

(1) வாக்குச்சாவடி சங்கம் அமைந்துள்ள இடத்தில், அல்லது சங்கத்தின் தலைமையகத்தில் அனைத்து வாக்காளர்களும் வரக்கூடிய சங்க கட்டிடத்தில் இருக்கவேண்டும்.

(2) வாக்குப்பதிவற்கான இடங்கள் (buildings) வாக்களிக்கக்கூடிய வாக்காளர்களின் எண்ணிக்கையை கருத்திற் கொண்டு இருக்கவேண்டும்.

(3) எண்ணிக்கையைப் பொருத்தும், இடவசதியைப் பொருத்தும் ஒரே வாக்குச்சாவடியில் பல வரிசைகளிலோ, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குச்சாவடிகளாகவோ (multi polling booth and different polling booth), இருக்கலாம்.

(4) சங்கம் அமைந்துள்ள கட்டிடத்தில் வாக்குப்பதிவு நடத்த இயலாத நிலையில், அல்லது சங்கத்திற்கு அல்லது இதர கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான வேறு கட்டிடங்கள் ஏதும் இல்லாத நிலையில், அரசு கட்டிடங்கள், அரசு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கட்டிடங்கள், அரசு அல்லது அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் கட்டிடங்களை தேர்வு செய்யவேண்டும்.

(5) தவிரவும் கட்டிடங்கள் தேர்வு மேற்கொள்ளும் போது, வாக்குப்பதிவு நாளுக்கும் வாக்கு எண்ணிக்கை நாளுக்கும் உள்ள இடைவெளி நாட்களை கணக்கில் கொண்டு, அந்நாட்களில் வாக்குப் பெட்டிகள் போதுமான பாதுகாப்புடன் இருப்பதையும் உறுதி செய்யவேண்டும். இவ்வகையில் வாக்குப்பதிவு நடைபெறும் இடமும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் இடமும் ஒரே இடமாக இருப்பது உசிதமாகும்.

இந்த அறிவுரைகளை தேர்தல் அலுவலர்களுக்குத் தெரிவித்து, தெரிவித்த விவரத்தை அறிக்கையாக அனுப்பிடக் கோரப்படுகிறது.

(ஒம்../-)ம.ரா.மோகன்
ஆணையர்.

பெறுநர்
1) மாநில தேர்தல் அலுவலர்கள்
2) மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
3) இணைப்பதிவாளர்கள்